**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT MUNSIF JUDGE.**
**KANNIYAKUMARI AT NAGERCOIL.**
**O.S. No.364/2011**

Deposition of the witness: PW2

Date: 29.01.2026

Solemnly affirmed by Mr. K. Bibin Raj Clerk in accordance with the provision of Act X of 1873.

| | |
|---|---|
| Name | ஜெபர்லின் |
| Father'sName | ஜெயராஜ் |
| Village | நாகர்கோவில் |
| Taluk | அகஸ்தீஸ்வரம் |
| Calling | வழக்கறிஞர் |
| Age | 37 |

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையராக நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் ஆவேன். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த நீதிமன்ற ஆணையர் அறிக்கை (புகைப்படத்துடன் ) மற்றும் வரைபடத்தை நீமசாஆ 1 மற்றும் 2 ஆக குறியீடு செய்கிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வந்தது.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை

எனது அறிக்கையில் முதல் பக்கத்தில் 04.01.2021 , 20.11.2021 ஆகிய 2 தேதிகளில் வழக்கு சொத்தை பார்வையிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. மேற்படி 2 தேதிகளை தவிர வேறு தினங்களில் வழக்கு சொத்திற்கு சென்றதில்லை என்றால் சரி. என்னுடைய அறிக்கையை நான் 21.03.2025 ம் தேதி 4 ஆண்டுகளுக்கு பிறகு தாக்கல் செய்தேன் என்றால் சரி. வாதியின் பிராது ஆணையர் மனு பிரதியின் எதிர்கோருறுரிமை

வழக்கு பிராது ஆகியவற்றின் நகல்களை எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரி. வழக்கு சொத்தை பார்வையிடுவதற்கு முன்பாகவே கொடுக்கப்பட்டது என்றால் சரி.

வழக்கு சொத்தாக வாதிகள், பிரதிவாதிகள் ஒரே சொத்தை வழக்கு சொத்தாக காண்பித்ததால் அவர்கள் காட்டிய சொத்தை நான் பார்வையிட்டேன் என்றால் பார்வையிட்டேன். பார்வையிட்டு ரிசர்வே பிளான் பிரகாரம் அளவீடு செய்தேன். பிராதிலும் ஆணையர் மனுவிலும் வழக்கு சொத்தாக 15 சென்ட் காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. அதற்கு பழைய சர்வே எண் 6013, புதிய சர்வே எண் 528/5 பி2,சி2,டி2,இ 2, ஆக காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. எதிர் கோருறுரிமை வழக்கில் பழைய சர்வே எண் 6015 ல் புதிய சர்வே எண் 528/5 ஏ 1 ஆக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. புதிய சர்வே எண் 528/5 ஏ 1 தவிர வேறு சர்வே எண்கள் சொல்லப்படவில்லை என்றால் சரி.

ஆணையர் அறிக்கையில் வழக்கு சொத்தின் மேற்கு பக்கம் டி புள்ளியில் இருந்து அளக்க தொடங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. டி புள்ளியில் வழக்கில் கூறிய எ,பி,சி,டி பகுதியும் வழக்கில் கூறிய வழக்கு பட்டிகை சொத்தோ எதிர்கோருறுரிமை சொத்தோ இல்லை என்றால் சரி. பி மற்றும் சி புள்ளி வழக்கு சொத்தின் மேற்கு எல்லையாக காண்பித்துள்ளேன் என்றால் சரி. வழக்கில் தர்க்கம் செய்யப்பட்ட சொத்துகளாக, பி,எஸ்,டி,கே என்று காண்பித்துள்ளேன் என்றால் சரி. வாதிகள், பிரதிவாதிகள் என்னிடம் மேற்படி பி,எஸ்,டி,கே இடத்தை இந்த வழக்கில் தர்க்க சொத்தாக காண்பித்தார்கள்.

மொத்த சொத்தும் பி,எஸ்,டி,கே இடத்தின் அளவு 22 சென்ட் 526 ச.லிங்ஸ் ஆக காட்டியுள்ளேன் என்றால் சரி. 22 சென்டிற்குள் 1 பகுதி வாதியின் தர்க்கம் செய்யும் சொத்து உள்ளதாக காட்டியுள்ளேன் என்றால் சரி. ஆணையர் அறிக்கையில் பிராதில் சொல்லியுள்ள 15 சென்ட் இடத்தை பூமியில் நான் அடையாளப்படுத்தி காட்டவில்லை

என்றால் சரி. பூமியில் 15 சென்ட் இடம் இல்லை. 8.668 சென்ட் நிலம் மட்டுமே ரிசர்வே பிளான் படி உள்ளது. என்னுடைய வரைபடத்தில் பி,ஆர், எம், கே ஆக 8.668 சென்ட் இடத்தை காண்பித்துள்ளேன் என்றால் சரியல்ல. பி,ஆர், எம்,சி ஆக காட்டியுள்ளேன்.

வரைபடத்தில் காட்டியுள்ள ஆர், எம் பகுதியின் கிழக்கு பக்கம் வேலியோ, சுவரோ, எல்லை கற்களோ இல்லை என்றால் சரியல்ல. எஸ், டி யில் காம்பவுண்ட் சுவர் உள்ளது. ஆர், எம் கிழக்கில் தொட்டோ அல்லது அதற்கு அருகிலோ காம்பவுண்ட சுவர், வேலியோ, எல்லை கற்களோ இல்லை என்றால் சரி.ஆர், எஸ், எம், டி பகுதியில் நடுவில் வேலியோ , காம்பவுண்ட சுவரோ, எல்லை கற்களோ இல்லை என்றால் சரி. பி,எஸ், டி, கே பகுதி ஒரே கிடப்பாக ஒரே காம்பவுண்டில் உள்ளது என்றால் சரி.

என்னுடைய வரைபடத்தில் பி, ஆர், எஸ், டி,எம்,எல்,கே,ஜே,ஐ, ஏச், தாலுகா சர்வேயர் 22.526 ஆக காட்டியுள்ளார் என்றால் சரி. என்னுடைய அறிக்கையில் 4 வது பக்கத்தில் 3 வது பாராவில் 6 வது வரியில் பி, ஆர், க்யூ, எம், எல், கே,ஜே, ஐ, ஏச் பகுதியை 22.526 ஆக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி இரண்டில் எது சரி என்றால் சரியல்ல. மேற்படி 22.526 சென்டு பகுதிக்குள் வாதியின் சொத்தை காட்டியுள்ளேன். 4 வது பக்கத்தில் முதல் பாராவில் 7.186 சென்ட் சர்வேஎண் 528/5 ஜி யில் வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி.

என்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ள 528/ஜி யில் 7.186 சென்ட்டையும், வாதியின் சொத்தாக குறிப்பிட்டுள்ள 8.668 சென்டையும் கணக்கிட்டால் வாதியின் வழக்கு சொத்து 15 சென்ட் வரும் என்றால் தெரியாது. வரைபடத்தில் வடக்கு பக்கம் ஒரு கட்டிடம் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. இந்த கட்டிடத்தை திறந்து பார்த்தேனா என்றால் இல்லை. அந்த கட்டிடமானது ஆர், க்யூ பகுதிக்கு கிழக்கே 1.6 மீ வெளியே வருகிறது என்றால் சரி. அந்த 1.6 மீ பகுதி நான் சொல்லும் சர்வே எண் 528/ஜி

யில் வரும் என்றால் சரி.

எதிர்கோருறுரிமை வழக்கு சொத்தின் பழைய சர்வே எண்.6015 க்கு புதிய சர்வேஎண்.528/5 எ 1 என்றால் சரி. அந்த சர்வே எண் 528/5 எ 1 ஐ நான் அளவீடு செய்யவோ, வரைபடத்தில் காட்டவோ இல்லை என்றால் சரி. எதிர்கோருறுரிமையில் வழக்கு சொத்தின் 4 எல்லைகளை பார்த்து அளவீடு செய்யவில்லை என்றால் சரி. எதிர்கோருறுரிமை சொத்தினை ஆவணத்தை கொண்டு அளவீடு செய்யவில்லை என்றால் சரி.

ஆணையர் மனுவில் பி பட்டிகை சொத்தை நான் அளவீடு செய்து கண்டுபிடிக்கவில்லை என்றால் சரி. 6015 ஐ ஒப்பிட்டு புல ஒப்புமை சான்று வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு ஏ பட்டிகை சொத்தின் வடக்கு பக்க எல்லையை நிர்ணயம் செய்ய சர்வே எண் 6015 ஐ அளவீடு செய்தோமா என்றால் 6015 ஐ அளவீடு செய்யாமல் வடக்கு பக்க எல்லையை நிர்ணயம் செய்தோம். வடக்கு பக்க எல்லையில் வரையறுக்கப்பட்ட காம்பவுண்ட சுவர் உள்ளது என்றால் சரி. 22 சென்ட் சொத்தின் வடக்கு, கிழக்கு , மேற்க பக்கங்களில் காம்பவுண்ட சுவர் உள்ளது என்றால் சரி. தெற்கு பக்கத்தில் வாசல் என்றால் சரி. வடக்கு பக்கம் உள்ள கட்டிடத்தில் மின் இணைப்பு உள்ளதா என்றார்ல இல்லை.

இந்த வழக்கு பட்டிகை சொத்தை பார்வையிடும்போது எடுத்த குறிப்பை பத்திரப்படுத்தி வைத்துள்ளேனா என்றால் தேடித்தான் பார்க்க வேண்டும். இந்த அறிக்கையுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தேடிபார்த்து கிடைத்தால் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். வழக்கு சொத்தை பார்வையிட்டு 4 வருடம் கழித்து வழக்கு சம்மந்தமான விவரங்களை மறந்து விட்டு தாலுகா சர்வேயர் கொடுத்த வரைபடத்தின் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னுடைய ஆணையர் அறிக்கையும், வரைபடமும் தவறானவை ஏற்புடையதல்ல என்றாலும் எனது வாரண்டை உரிய முறையில் நிறைவேற்ற வில்லை என்றாலும் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனது அறிக்கையில் பி, எஸ், டி,கே பகுதியானது வட்ட அளவையர் வரைபடத்தின் படி வழக்கு பட்டிகை சொத்தாக நான் காண்பித்துள்ளேன் என்றால் சரி. மேற்படி சொத்தில் செங்கலால் கட்டப்பட்ட சுவரும் , இரும்பு கேட்டும் தெற்கு பகுதியில் இருந்ததாக அறிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. 3 பக்கமும் சிமெண்ட் கல்லால் கட்டப்பட்ட காம்பவுண்ட சுவர் எனது அறிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரி. வட்ட சர்வேயர் கொடுத்த பிளானில் உள்ள பி, எஸ், டி ,கே இடத்தில் வாதியும், பிரதியும் காட்டி கொடுத்த வழக்கு சொத்து என்று சொல்லயுள்ளேன் என்றால் சரி. பி, எஸ், டி,கே மொத்த அளவு 22.526 சென்ட் என்றால் சரி.